**சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.**

**அ.வ எண் 68/2013**

| | | |
|---|---|---|
| பெயர் | .. | மனோகரன் (வாசா2) |
| த/பெ. க/பெ | .. | |
| கிராமம் | .. | |
| தாலுகா | .. | |
| தொழில் | .. | |
| வயது | .. | |

1873ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2026 ஆண்டு செப்டம்பர் மாதம் 07ம் நாள் இந்நீதிமன்ற நிலை II பலகை எழுத்தர் அருணா ரூபவதி அவர்களால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை:**

எனது பெயர் மனோகரன். நான் மேற்படி முகவரியில் குடியிருக்கிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை வந்தது. அதன்படி இன்று நான் ஆஜராகி உள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.4 உயில் ஆவணத்தை தயார் செய்தது நான்தான். அந்த உயில் ஆவணத்தை புஷ்ப காந்தியம்மாள் என்பவர் எழுதி கொடுத்தார். அந்த ஆவணத்தை கலைச்செல்வி மற்றும் இதர நபர்களுக்கு புஷ்ப காந்தியம்மாள் எழுதி கொடுத்தார். அந்த உயில் ஆவணம் மதுரை மாவட்டம் எண் 4 இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. உயில் ஆவணத்தில் உள்ள கையெழுத்து புஷ்ப காந்தியம்மாள் கையெழுத்து ஆகும். அந்த உயில் ஆவணத்தில் லோகநாதன், கருப்பையா சாட்சி கையொப்பம் போட்டார்கள். அந்த சாட்சிகள் இருவரையும் எனக்கு தெரியும், அதில் சாட்சி கருப்பையா இறந்து விட்டார். உயில் ஆவணம் பதிவு செய்த போது சார்பதிவாளர் புஷ்ப

காந்தியம்மாளிடம் உயில் ஆவணங்கள் குறித்து விபரங்கள் கேட்டு விட்டு சம்மதமா என கேட்டு விட்டு பதிவு செய்தார்.

**குறுக்கு விசாரணை:**

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையில் எது சம்பந்தமாக சாட்சியம் அளிக்க வேண்டும் என அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் குறிப்பிடப்பட்டிருந்தது. உயில் ஆவணம் தயார் செய்யப்பட்டு 26 வருடங்கள் ஆகிவிட்ட நிலையில் அந்த அசல் உயில் எப்படி இருக்கும் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது சொந்த ஊர் மதுரை மாவட்டம் பழங்காநத்தம் ஆகும். நான் பழங்காநத்தத்தில் வசித்து வருகிறேன் என்பதை காட்ட நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தற்போதும் ஆவண எழுத்தர் பணிபுரிந்து வருகிறேன். நான் ஆவண எழுத்தர் உரிமம் 1982ம் வருடம் வாங்கினேன். எனது ஆவண எழுத்தர் உரிமத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உயில் ஆவணத்தை நான்தான் தயார் செய்தேன் என்பதற்கு எனது ஆவண எழுத்தர் உரிம நகலை ஆவணத்துடன் தாக்கல் செய்தேனா என்றால் அவ்வாறு தாக்கல் செய்ய அவசியம் இல்லை. மேற்படி உயில் ஆவணத்தில் எனது கையெழுத்து, எழுத்தர் உரிமம் எண் குறிப்பிடப்பட்டுள்ளது. உயில் ஆவணத்தை வரைவு செய்தது நான்தான் என்பதற்கும் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்பதையும் உறுதிபடுத்துவதற்கு அந்த உயில் ஆவணத்தில் எந்த விபரமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி உயில் ஆவணத்தில் டைப் செய்தது யார் என்ற விபரம் அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புஷ்ப காந்தியம்மாளின் அங்க அடையாளங்கள் மற்றும் அவர் உயரமானவரா, குட்டையானவரா போன்ற விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த உயில்

ஆவணத்தை தயார் செய்வதற்கு எத்தனை மாதங்களுக்கு முன்பு யார் வந்து என்னை பார்த்தது என்றால் மேகநாதன், கலைச்செல்வி, புஷ்ப காந்தியம்மாள் ஆகியோர் சுமார் 15 முதல் 20 நாட்களுக்கு முன்பு என்னை பார்க்க வந்தார்கள். தேதி குறிப்பிட்டு கூற இயலாது. புஷ்ப காந்தியம்மாள் உயில் ஆவணத்தில் கண்ட சொத்துக்களின் ஆவணத்தை என்னிடம் கொடுத்தார். என்னனென்ன ஆவணங்களை புஷ்ப காந்தியம்மாள் என்னிடம் கொடுத்தார் என்றால் அந்த விபரம் உயில் ஆவணத்தில் உள்ளது. அந்த உயில் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களைத்தான் என்னிடம் புஷ்ப காந்தியம்மாள் காண்பித்தார். அந்த உயில் ஆவணத்தில் புஷ்ப காந்தியம்மாளின் முகவரியாக கோவில்பட்டி முகவரி காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எந்த சார்பதிவக அலுவலகத்தில் ஆவணம் பதிவு செய்யப்படுகிறதோ அந்த எல்கைக்குள் வசிக்கும் முகவரியைதான் காட்ட வேண்டும் என்றால் சட்டத்தில் அவ்வாறு கட்டாயம் எதுவும் இல்லை. புஷ்ப காந்தியம்மாளுக்கு மதுரை மாவட்டத்தில் சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் எனக்கு தெரியாது. மதுரை மாவட்டத்திற்குள் புஷ்ப காந்தியம்மாளுக்கு சொத்துக்கள் எதுவும் இல்லாத நிலையில் மதுரை மாவட்ட எண் 4 சார்பதிவாளர் அலுவலகத்தில் அந்த உயிலை பதிவு செய்துள்ளது அரசாணை எண்.96 க்கு விரோதமானது என்றால் சரியல்ல. பழங்கநத்தம் பகுதிக்கு உரிய சார்பதிவாளர் அலுவலகம் மதுரை மஹாலில் அமைந்திருந்தது என்றால் சரிதான். மதுரையில் 6 சார்பதிவாளர் அலுவலகம் உள்ளது. பழங்காநத்தத்தில் நான் வசித்து வரும் வீட்டிலேயே எனது அலுவலகமும் உள்ளது. மேற்படி 3 நபர்களும் உயில் பதிவதற்கு முதலில் வந்து விபரம் கேட்டுவிட்டு பின்னர் ஒரு வாரம் கழித்து கேட்ட ஆவணங்களை கொடுத்தார்கள். அதில் கிரய ஆவணங்கள் மட்டுமே கொடுத்தார்கள்.

வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை கொடுத்தார்களா என்றால் அப்போது ஆவணம் பதிவதற்கு அந்த நடைமுறை இல்லை. புஷ்ப காந்தியம்மாள் உயில் ஆவணத்தில் கண்ட கோவில்பட்டி முகவரியில் தான் வசித்து வந்தார் என்பதை சார்பதிவாளர் எந்த அடிப்படையில் உறுதி செய்து கொண்டார் என்றால் சார்பதிவாளர் புஷ்ப காந்தியம்மாளிடம் வாய்மொழியாக விபரங்களை கேட்டு உறுதி செய்து கொண்டார். உயில் ஆவணம் பதிவுசெய்வதற்கு முன்போ, பதிவு சமயத்திலோ அவர் எப்படி கையெழுத்து போடுவார் என எனக்கு தெரியாது என்றால் உயில் பதிவு சமயத்தின் போது தான் அவர் கையெழுத்து போட்டதை நான் பார்த்தேன். அதற்கு முன்பு புஷ்ப காந்தியம்மாள் எப்படி கையெழுத்து போடுவார் என்று எனக்கு தெரியாது. கோவில்பட்டியில் சார்பதிவாளர் அலுவலகம் 1969ம் வருடம் முதல் செயல்பட்டு வந்த நிலையில் அங்கு உயில் ஆவணத்தை பதிவு செய்யாமல் ஏன் மதுரைக்கு வந்து பதிவு செய்கிறீர்கள் என புஷ்ப காந்தியம்மாளிடம் கேட்டேனா என்றால் கேட்டேன். எனக்கு தற்போது 71 வயது ஆகீறது. இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் சர்வே எண் நடைமுறைக்கு வந்து விட்டது என்றால் சரிதான். ஜமீன் சர்வே எண் என்பது சுதந்திரத்திற்கு நடைமுறையில் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. அந்த உயில் ஆவணத்தில் புஷ்ப காந்தியம்மாளுக்கு எத்தனை பிள்ளைகள் ஒவ்வொருவரும் என்ன வேலை பார்க்கிறார்கள், அவர்களின் தகுதி போன்ற விபரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அந்த உயில் ஆவணத்தில் திருத்தம் செய்யப்பட்ட இடத்தில் திருத்தம் செய்யப்பட்ட எண்ணிக்கை அந்த பக்கத்தின் அடியில் எழுதி கையொப்பம் இடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தில் முதல் பக்கம் ஒரு திருத்தம் உள்ளது என்றால் சரிதான். அந்த உயில் ஆவணத்தில் சர்வே எண் விபரம் குறிப்பிடாமல் ஜமீன் சர்வே எண் தான்

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர்கள் கொடுத்த ஆவணத்தில் உள்ள விபரத்தை நான் குறிப்பிட்டுள்ளேன். அந்த உயில் ஆவணத்தை எழுதிக்கொடுத்த புஷ்ப காந்தி அம்மாள் எவ்வாறு கையொப்பம் செய்துள்ளார் என்றால்; புஷ்ப காந்தியம்மாள் என கையொப்பம் செய்துள்ளார். ஆனால் அந்த ஆவணத்தில் புஷ்ப காந்தி அம்மாள் என்றுதான் நான் தயார் செய்துள்ளேன் என்றால் சரிதான். உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்த லோகநாதன் இன்று நீதிமன்றம் வந்துள்ளார் என்றாலும், அவர் என்னுடன் தான் வந்தார் என்றாலும் சரிதான். லோகநாதன் அடிக்கடி எங்கள் அலுவலகம் வரும் நபர் என்றால் இல்லை. புஷ்ப காந்தியம்மாள் உயில் ஆவணத்தை பதிவு செய்த நாளில் கோவில்பட்டியிலிருந்து வந்தாரா அல்லது எங்கிருந்து வந்தார் என்று எனக்கு தெரியவில்லை. புஷ்ப காந்தியம்மாள் எத்தனை நபர்களை உடன் அழைத்து வந்தார் என்றால் அந்த விபரம் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த உயில் ஆவணம் தயார் செய்யப்பட்ட சாட்சிகளிடம் கையெழுத்து வாங்கிதான் சார்பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். உயில் ஆவணத்தில் கண்ட சாட்சிகள் சார்பதிவாளர் அலுவலகத்தில் வந்த பின்பு முதல் பக்கத்தின் பின்புறம் இரு சாட்சிகளும் கையெழுத்து போட்டார்கள். அந்த சாட்சிகளை யார் அழைத்து வந்தது என்று எனக்கு தெரியாது. அந்த சாட்சிகள் புஷ்ப காந்தியம்மாளின் உறவினர்களா என்று எனக்கு தெரியாது. உயில் தயார் செய்தபோது 2 சாட்சிகளை அழைத்து வரவேண்டும் என நான் அவர்களிடம் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். அந்த உயில் ஆவணத்தில் புஷ்ப காந்தியம்மாள் புகைப்படம் இல்லை என்றால் சரிதான். உயில் எழுதிய சமயத்தில் புஷ்ப காந்தியம்மாளின் வயது எவ்வளவு இருக்கும் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. புஷ்ப காந்தியம்மாளை என் முன்பு ஆஜர்

படுத்தினால் அவரை அடையாளம் கண்டு பிடித்து விடுவேனா என்றால் ஓரளவு கண்டுபிடித்து விடுவேன். நான் 2000 ம் வருடத்தில் உயில் எழுதிய பின்பு இன்று வரை புஷ்ப காந்தியம்மாளை பார்த்தது கிடையாது என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தில் கண்ட புஷ்ப காந்தி அம்மாளின் கையெழுத்து மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புஷ்ப காந்தியம்மாள் புற்றுநோய் நோயாளி என்ற நிலையில் அவர் சென்னையில் உள்ள புற்றுநோய் மருத்துவமனையில் தொடர் சிகிச்சை பெற்று வந்தார் என்றாலும் அவரை கோவில்பட்டியிலிருந்து வெளியூருக்கு அழைத்து செல்வதற்கு பாதுகாப்பாகத்தான் அழைத்து செல்லமுடியும் என்றும்,பழங்காநத்தத்தில் உள்ள எங்கள் அலுவலகத்திற்கு அவர் 2 முறை வந்ததாக கூறுவது பொய் என்றாலும் சரியல்ல. அந்த உயில் ஆவணத்தை நான்தான் உற்பத்தி செய்தேன் என்றாலும் அதில் உள்ள கையெழுத்து புஷ்ப காந்தியம்மாள் கையெழுத்தே இல்லை என்றாலும் சரியல்ல. சாட்சிகளில் யார் முதலில் சாட்சி கையொப்பம் போட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சாட்சிகள் கையெழுத்து போட்டார்கள் ஆனால் யார் முதலில் கையெழுத்து போட்டார் என்பது எனக்கு தெரியாது. வாதிகள் ஆள்மாறாட்டம் செய்து எனக்கு வேண்டப்பட்ட சார்பதிவாளரை வைத்து மேற்படி உயில் ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி உயில் ஆவணத்தை பதிவு செய்த பின்னர் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து யார் வாபஸ் பெற்றது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் கூட்டு சேர்ந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மோசடியாக உயில் ஆவணம் தயார் செய்து பதிவு செய்வது வழக்கம் என்றால் சரியல்ல. நான் வாதிகளுடன் கூட்டு சேர்ந்து மோசடியாக உயில் பதிவு செய்ததால் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தில் கண்ட

சொத்துக்களுக்கு ஜமீன் சர்வே எண் கிடையாது என்றாலும், மேற்படி உயில் 2000 ம் வருடத்தில் பதிவு செய்துள்ள நிலையில் 1996 ம் வருடமே புஷ்ப காந்தியம்மாள் பட்டா, பாஸ்புக் வாங்கிய நிலையில் அதன் உண்மையான சர்வே எண் விபரங்களை குறிப்பிடாமல் உண்மையான ஆவணங்கள் இருந்து வரும் நிலையில் பொய் விபரங்களை குறிப்பிட்டு அந்த ஆவணத்தை பார்த்தாலே அது மோசடியானது என தெரியவரும் என்றாலும் சரியல்ல. அந்த உயில் ஆவணத்தை பதிவு செய்த சமயத்தில் பணியில் இருந்த சார்பதிவாளர் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த ஆவணத்தில் உள்ள கைரேகை, கையெழுத்து அனைத்தும் மோசடியானது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.